වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

Annual Performance Report

2021



දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය -මහනුවර

மாவட்ட செயலகம் - கண்டி

District Secretariat – Kandy

மாவட்ட செயலாளரின் /அரசாங்க அதிபரின் செய்தி...



மாவட்ட நிர்வாகத்தின்அதி உயர் நிர்வாக மத்திய நிலையம் மாவட்டச் செயலகமாகும் . இலங்கையின் 25மாவட்டச் செயலகங்களுக்குள் கண்டி மாவட்டச் செயலகத்துக்கு அதி விசேட ஸ்தானமொன்று உள்ளது .புனித தந்தம் பேணப்பட்டுள்ள மத்திய மலை நாட்டின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததும் உலக மரபுரிமை வாய்ந்ததுமான நகரமாக தேசிய மற்றும் சர்வதேச மக்களின் கௌரவத்துக்கு அது பாத்திரமாகி இருப்பதோடு அதன் கலாசார உரிமை , பெருமைமிகு வரலாறு மற்றும் இயற்கைச்சூழல் என்பன அதன் மகத்துவத்தை மேலும் உயர்த்துகின்றன .

கண்டி மாவட்டம் 1940சதுர கிலோமீட்டர் பரப்பளவில் 1,475,627பேரைசனத்தொகையாகக் கொண்டிருக்கிறது .மாவட்டச் செயலகத்தையும் 20பிரதேச செயலகங்களையும் 1188கிராம அலுவலர் பிரிவுகளையும் 2588கிராமங்களையும் அது கொண்டுள்ளது .

பிரதேச அபிவிருத்திக்குப் பரந்த பங்களிப்பை வழங்கும் பொருட்டு பிரதேச நிர்வாக மத்திய நிலையங்களான பிரதேச செயலகங்கள் 20னுள்ளும் உயர் செயற்றிறனைப் பேணிக்கொண்டு தேவையான உத்திகளைக் கையாண்டு நிரந்தர மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு ,நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொல்வாத்ர்குத் தேவையான பின்னணி உருவாக்கப்பட்டது .

பூகோளக் கொள்ளை நோயான கோவிட் 19 –பரவலின் கீழ் 2020ஆம் ஆண்டு மார்ச் ,ஏப்ரல் , மே மாதங்களில் இலங்கையின் அநேகமான அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மூடப்பட்ட சந்தர்ப்பத்தில் பிரதேச செயலகங்கள் ,சுகாதார ,பாதுகாப்பு மற்றும் ஏனைய துறைகளுடன் சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்திக்கொண்டு மக்கள் நலப் பணிகளை தொடர்ந்தேர்ச்சையாகவும் துரிதமாகவும் மேற்கொள்ள முடிந்தமை நாம் பெற்ற பாரிய வெற்றியாகும் .


எமது மனித வளங்களை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்துகொண்டு வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்யப் பொருத்தமான நிறுவனச் சூழல் ஒன்றை உருவாக்கிக்கொண்டு நேயம் மிக்க மக்கள் சேவையொன்றை வழங்குவதனை நோக்காகக் கொண்டு 2021 ஆம் ஆண்டு கண்டி மாவட்ட நிர்வாகம் முதல் கிராம மட்டம் வரையான ஒட்டு மொத்தப் பொறிமுறையையும் விளக்கும் வருடாந்த செயலாற்றுகை மற்றும் கணக்கறிக்கையை இவ்வண்ணம் வெளியிடப் பங்களித்த அலுவலர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் .

சந்தன தென்னகோன்

மாவட்டச் செயலாளர் /அரசாங்க அதிபர் ,கண்டி

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர்

நிர்வாக வரைபடம் – கண்டி மாவட்டம்









அடிப்படைத் தரவுகள்

மாகாணம்		மத்திய
மாவட்டம்		கண்டி
சதுர அளவு (.மீ .கி .ச)		1,940
பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை		20
கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை		1,188
கிராமங்களின் எண்ணிக்கை		2,588
தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை		13
மாநகர சபைகளின் எண்ணிக்கை		01
நகர சபைகளின் எண்ணிக்கை		04
பிரதேச சபைகளின் எண்ணிக்கை		17
கல்வி வலயகங்களின் எண்ணிக்கை		06
பாடசாலைகளின் எண்ணிக்கை (2020)		651
ஆசிரியர்களின் எண்ணிக்கை (2020)		17,782
மாணவர் எண்ணிக்கை (2020)		274,557
வைத்தியசாலைகளின் (கிராமிய /மாவட்ட/போதனா/பொது) எண்ணிக்கை		57
ஆயுர்வேத வைத்தியசாலை நிலையங்களின் எண்ணிக்கை		15
வாக்காளர் எண்ணிக்கை (2020)		1,140,168
பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை		12
மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை (கண்டி மாவட்டம்)		29
உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை		01
மொத்த சனத்தொகை (2020)		1,483,105
பெண்	(2020)	775,951
ஆண்		707,154
குடும்பங்களின் எண்ணிக்கை	(2012)	348,019
வீட்டு அலகுகளின் எண்ணிக்கை		342,911

உள்ளடக்கம்

மாவட்ட செயலாளரின் /அரசாங்க அதிபரின் செய்தி.....

நிர்வாக வரைபடம் – கண்டி மாவட்டம்.....

அடிப்படைத் தரவுகள்.....

1. அத்தியாயம்..... 1

அறிமுகம்..... 1

1.1 கண்டி மாவட்டத்தின் அறிமுகம்..... 1

1.2 மாவட்ட செயலகம் பற்றிய அறிமுகம்..... 8

1.3. நோக்கு, ,பெறுமானங்கள், செயற்பணி 10

1.4 மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் பிரதான அலுவல்கள் 12

1.5 ஒழுங்கமைப்பு அட்டவணை 14

1.6. மாவட்ட செயலாளரின் மேற்பார்வையின் கீழ் வரும் பிரதான பிரிவுகள்.....15

1.7 கண்டி மாவட்ட செயலகத்தின் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்கள் 16

2. அத்தியாயம்.....17

முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்.....17

2.1விசேட நிகழ்வுகள் 17

2.2 கண்டி மாவட்டம் அடைந்த விஷேட வெற்றிகள் 41

2.3 எதிர்கால இலக்கு 47

2.4 சவால்கள் 49

3. அத்தியாயம்.....50

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று.....50

3.2 நிதி நிலைமைக் கூற்று 52

3.3 நிதிப் பாய்ச்சல் கூற்று 53

3.5 வருமான திரட்டு வினைத்திறன் (ரூ.000).....65

3.6 மாவட்ட செயலாளர் 258 செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் பயன்பாட்டு வினைத்திறன் 66

3.7 நி.பி 208 ன் படி, வேறு அமைச்சு/ திணைக்களங்களது பிரதிநிதியாக கிடைத்த நிதிப் பயன்பாடு 66

4. அத்தியாயம்.....69

திட்டமிடல் பிரிவு 4.1 69

பொறியி யல் பிரிவு4.2.....70

கணக்குப் பிரிவு 4.3 70

ஸ்தாபனப் பிரிவு 4.4 72

குடியியல் மற்றும் புள்ளிவிபரவியல்4.5 75

அனர்த்த முகாமைத்துவப் பிரிவு 4.6.....76

மாவட்ட காணிப் பயன்பாட்டுப் பிரிவு4.7 77

காணிப் பிரிவு 4.8 78

மத அலுவல்கள் பிரிவு 4.9(பௌத்த சமய அலுவல்கள்) 78

மத அலுவல்கள் பிரிவு 4.10(இந்து சமயம்) 79

சமய அலுவல்கள் பிரிவு 4.11(கிறிஸ்தவ சமயம்) 80

சமய அலுவல்கள் பிரிவு 4.12(இஸ்லாம் சமயம்).....80

கலாசாரப் பிரிவு 4.13 81

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் அரச கரும மொழிகள் பிரிவு 4.14 83

சிறு கைத்தொழில் பிரிவு 4.15.....83

அளவை அலகு மற்றும் தர சேவைகள் பிரிவு4.16.....84

பாவனையாளர் சேவைப் பிரிவு 4.17.....84

நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை 4.18.....84

பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அலகு 4.19 85

சிறுவர் முன்பிராய அபிவிருத்தித் தேசிய செயலகம் 4.20.....86

மனித வள அபிவிருத்திப் பிரிவு 4.21.....86

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவல்கள் பிரிவு 4.22.....87

விஞ்ஞான தொழில்நுட்பப் பிரிவு 4.23 88

விளைதிறன் பிரிவு 4.24.....88

மாவட்ட ஊடகப் பிரிவு 4.25.....89
அபி விருத்திப் பிரிவு4.26.....91
சமூர்த்திப் பிரிவு 4.27.....91
நீர் வாழ் உயிரினங்கள் பிரிவு 4.28.....92
மாவட்ட விவசாயப் பிரிவு 4.29.....92
சமூகப் பாதுகாப்புப் பிரிவு 4.30.....93
சமூக சேவைப் பிரிவு 4.31.....93
சமூ க சேவை 4.32 (முதியோர்).....94
(உளவள ஆலோசனை) சமூக சேவை 4.33.....95
விளையாட்டுப் பிரிவு 4.34.....95
அ ரச சார்பற்ற நிறுவனங்கள் பிரிவு/ நுண் நிதி 4.35.....96
மோட்டார் வாகனப் பிரிவு 4.36.....97
அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை 4.37.....98
உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 4.38.....98
5அத்தியாயம்.....99
நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவு முன்னேற்றம்.....99
6அத்தியாயம்.....99
மனித வளக் கையேடு.....99
06.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்– மாவட்ட செயலகம்.....99
06.2 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்– பிரதேச செயலகங்கள்.....99
06.2 1.நிறுவனத்தின் முன்னேற்றத்தை மனித வளக் குறைபாடு அல்லது மேலதிகம் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்துகிறது என்பதனை சுருக்கமாக விளக்குக.....100
06.3 மனித வள அபிவிருத்தி.....100
6.3.1 நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு அப்பயிற்சி நிகழ்ச்சிகள் எவ்வாறு பங்களிப்புச் செய்தன என்பதனை சுருக்கமாக விளக்குக.....103
.7இசைவு அறிக்கை.....104

1. அத்தியாயம்

அறிமுகம்

1.1 கண்டி மாவட்டத்தின் அறிமுகம்

மனோகரமான மலைத்தொடர்கள் மற்றும் ஆற்று பள்ளதாக்குகளினால் உருவெடுத்த கண்டி மாகாணம் மத்திய மலை பிரதேசத்தின் 1,940 சதுர கிலோ மீற்றர் உடைய பூமி பிரதேசத்தில் பரவியுள்ள மனோரம்யமான நிலப்பகுதியாகும். வடக்கில் மாத்தளை மாவட்டத்தின் உக்குவெல, இறத்தொடை லக்கல, பல்லேகம மற்றும் வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவுகளாலும், கிழக்கில் பதுளை மாவட்டத்தின் மஹியங்கன பிரதேச செயலக பிரிவாலும், தெற்கில் நுவரஎலிய மாவட்டத்தின் வலபனே, ஹங்குரனகெத,கொத்மலை, நுவரஎலிய மற்றும் அம்பகமுவ கோரளை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளாலும் மேற்கில் கேகாலை மாவட்டத்தின் அரனாயக்க, புலத்கொஹுப்பிட்டி, மாவனல்லை மற்றும் இறம்புக்கனை பிரதேச செயலகங்களாலும் குருநாகல் மாவட்டத்தின் மாவத்தகம மற்றும் ரிதீகம பிரதேச செயலகப் பிரிவுகளை எல்லைகளாகக் கொண்ட கண்டி மாவட்டம், வடக்கு அட்சாம்சம் 60.56ம் 70.29 மற்றும் கிழக்கு தீர்க்க ரேகை 80.25ம் 80.00 ம் இடையே அமைந்துள்ளது.

கண்டி மாவட்டத்தின் கூடிய பூமி பிரதேசத்தினை தழுவிக்கொண்டு வடிந்தோடும் மஹாவலி கங்கை மாவட்டத்தின் ஏனைய பகுதிகளில் இருந்து பெருக்கெடுக்கும் நீர் தாரைகள் மாஓயாவை சேர்ந்து அதன் கொள்ளனவை அதிகப்படுத்துகின்றது.

வரலாற்று பின்னணி

அபிமானமுடைய சரித்திரத்திற்கு உரிமைகோரும் கண்டி அநுராதபுரம், பொலொன்னறுவை யுகங்களின் போது மலைய நாட்டு பகுதிக்குரியதாக இருந்ததுடன், கம்பளையை ஆட்சி செய்த மூன்றாம் விக்ரமபாகு அரச காலத்தில் ஓர் நகரமாக முன்னேற்றப்பட்டுள்ளதாத பாரம்பரியக் கதைகளில் கூறப்பட்டுள்ளது. செங்கடகல நுவர (நகர்) எனும் பெயரால் அன்று குறிப்பிட்ட கண்டி, முதலாம் விமலதர்சூரிய அரசனால் சிங்கள இராசதானியின் தலை நகராக பயன்படுத்திக் கொண்டு அழகான தலதா மாளிகை ஒன்றையும், அரச மாளிகை உட்பட்ட அனைத்து அங்கங்களினால் பூரணமடைந்த, ஓர் முழுமை அடைந்த நகரமாக ஆக்கப்பட்டது. அன்று முதல் மூன்று நூற்றாண்டு காலத்திற்கும் அதிகமான காலம் போத்துகீசியம், ஓலாந்தர் மற்றும் ஆங்கிலயர்கள் ஆகிய மேற்கத்திய பலம் வாய்ந்த இனத்தவர்களிடமிருந்து மாசற்ற பௌத்த சமயம் மற்றும் சிங்கள கலாச்சாரத்தினை பாதுகாத்து கொண்டு 1815 மார்சி 02 ம் திகதி வரை சிங்கள அரச ஆட்சியின் தலை நகராக செங்கடகல நகர் அசையாதிருந்தது. கடல்துரை (மாகாணங்கள்) பிரதேசங்கள் மேற்கத்திய இனத்தவர்கள் ஆட்சி செய்த காலத்தில் ஏற்படுத்திய ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக நிகழ்ந்த வெற்றிகரமான யுத்தங்கள் பல கண்டியை மையமாக வைத்து நடந்தன. இரண்டாம் இராஜசிங்க அரசர் ஆட்சியின் போது, பேராதெனிய, கன்னோருவ மற்றும் யட்டிநுவர தந்துரை ஆகிய இடங்களில் இடம்பெற்ற யுத்தங்களின் போது ஆக்கிரமிப்பாளர்களான அன்னிய நாட்டைய படைகள் முழுமையாகவே அழிந்தன. அந்நியவர்களிடமிருந்து சிங்கள இராசதானியை காப்பதற்கு உருவாக்கிய முக்கிய கோட்டையான பலனகோட்டை தற்போதைய கடுகன்னாவ நகர் அருகில் அமைந்துள்ளது.

1815 பல அரசியல் பிரச்சினைகள் காரணமாக கண்டி இராட்சியம் பிரித்தானியர்களுக்கு உரித்தான பின்பு கடைசி சிங்கள அரசரான □ரீ விக்கிரம ராஜசிங்க அரசன் அவ்வாண்டில் பெப்ரவரி 15ம் திகதி மெதமஹநுவர போமுரே கிராமத்தில் வைத்து ஆங்கிலயரால் கைதுசெய்யப்பட்டார். 1815 மார்ச் மாதம் 02 ம் திகதி கண்டி மகுல் மடுவையில் வைத்து கையொப்பமிட்ட “உடரட்ட கிவிசும்” (மலைநாட்டு ஒப்பந்தம்)

மூலம் இலங்கையின் நிர்வாகம் ஆங்கிலயர்களின் கைக்கு மாரியதுடன் அவர்களால் நாட்டின் தலைநகரமாக கொழும்பை உபயோகிக்கும் வரை நாட்டின் பிரதான நகரமாக கண்டி நகரமே கருதப்பட்டது.

சிங்கள வரலாற்றின் கடைசி சுதந்திர யுத்தமான 1818 இன் ஊவா - வெள்ளஸ்ஸ கலகத்திற்கு கண்டி பிரதேசத்தின் உயர்குலத்தை சேர்ந்த தலைவர்கள் பலர் தலைமை வகித்துள்ளனர். தனது பதவிகளை அகற்றி விட்டு சுதந்திர போருக்காக தன்னை அர்ப்பணித்து கொண்ட மொணரவில கெப்படிபொல, மடுகல்ல ஆகிய தலைவர்கள் பலருடைய பிறப்பிடமாக இருந்தது கண்டியேயாகும். 1818 சுதந்திர போரை குரூரமாக அடக்கிய ஆங்கிலயர்களினால் கண்டி பிரதேசம் உட்பட்ட மலையகத்தை தோட்டத்தொழில் மற்றும் வியாபாரத்தை அடிப்படையாக கொண்ட பொருளாதார அமைப்பை நோக்கி எடுத்து செல்லப்பட்டது.

தோட்ட பொருளாதாரத்தின் கீழ் முதல் முதலாக அறிமுகப்படுத்திய கோப்பி பயிற்செய்கை பங்கஸ் நோயினால் அழிந்த பின் இலங்கையில் நாட்டிய முதல் தேயிலை மரம் தெல்தொட்டை பிரதேச செயலகப் பிரிவின் லூங்கந்துரை தோட்டத்தில் இன்றும் காணலாம்.

சரித்திர பிரசித்தி பெற்ற இடங்கள்

அகில உலக பௌத்த மக்களின் தலை சிறந்த புனிதஸ்தளமான தலதா மளிகை கண்டி நகரில் அமைந்துள்ளதுடன் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற புனிதஸ்தளங்கள் பல கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளது.

1. புனித தந்த (தலதா) மாளிகை
2. கடலாதெனிய விஹாரை
3. அம்பெக்க தேவாலயம்
4. தெகல்தொருவ இரஜமஹா விஹாரை
5. கல்மடுவ இரஜமஹா விஹாரை
6. தலாவை இரஜமஹா விஹாரை

காலநிலை மற்றும் சுற்றாடல் பண்புகள் 2018 – 2020

மத்திய மலையகம் பிரதானமாக கடல் மட்டத்தல் இருந்து மீற்றர் 100-1600 இடையிலான உயரத்தை கொண்டதாக அமைந்துள்ளது. ஆயினும் கண்டி மாவட்டத்தின் கிழக்கு பிரதேசம், மகாவலி கங்கையை எல்லையாக் கொண்டு கடல் மட்டத்தில் இருந்து 100 மீற்றர் அளவிலான சமவெளி நிலையை கொண்டுள்ளது. பொதுவாக மாதாந்த மழை வீழ்ச்சி 212 மி.மீ. அளவினை கொள்வதுடன், மாவட்டத்தின் கிழக்கு மற்றும் தாழ்ந்த (நில) பிரதேச வறட்சி வலைய காலநிலை பண்புகளை கொண்டுள்ளது.

மாதம்	மழை வீழ்ச்சி201 8 (மில்லி மீற்றர்)	மழை வீழ்ச்சி201 9 (மில்லி மீற்றர்)	மழை வீழ்ச்சி20 20 (மில்லி மீற்றர்)
ஜனவரி	20.3	3.60	23.0
பெப்ரவரி	39.5	55.10	3.8
மார்ச்	42.7	20.00	56.9
ஏப்ரல்	215.9	222.90	107.2
மே	344.5	17.90	316.6
ஜூன்	138.5	82.00	129.5
ஜூலை	48.2	96.80	115.5
ஆகஸ்ட்	180.7	165.80	114.2
செப்டம்பர்	157.8	72.00	219.1
அக்டோபர்	450.5	471.20	59.5
நவம்பர்	291.6	171.30	160.9
டிசம்பர்	99.1	164.40	189.3

மூலாதாரம் கால நிலை திணைக்களம் -

மாவட்டத்தின் மாதாந்த உச்ச மற்றும் ஆகக் குறைந்த வெப்ப நிலை -2019–2020

பொதுவான வெப்பம் செல்சியஸ் 20-22 பாகைக்கிடையிலான அளவில் இருப்பதுடன், ஆண்டு முழுவதும், மென்மையான காலநிலை மாவட்டத்தில் அதிகமான நிலப் பிரதேசங்களில் நிலவுகிறது. பொதுவாக தெல்தொட்டை, பஸ்பாகே கோரளை, கங்க இஹலகோரளை, உடதும்பர, பன்வில ஆகியப் பகுதிகளின் வெப்பநிலை ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவை கொள்ளவதுடன் முக்கியமாக வறட்சி வலயத்தில் அமைந்திருக்கும் மினிப்பே பிரதேசத்தின் வெப்பநிலை ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடையில் பொதுவாக அதிகமானதாகும்.

தொ. இ.	மாதம்	வெப்பம்201 9 (செல்சியஸ் பாகை)		வெப்பம் 2020 (செல்சியஸ் பாகை)	
		உச்ச	குறைந்த	உச்ச	குறைந்த
1	ஜனவரி	29.8	18.5	30.7	19.8
2	பெப்ரவரி	31.0	20.6	31.4	20.3
3	மார்ச்	33.2	19.9	33.6	-
4	ஏப்ரல்	32.4	21.5	33.1	21.7
5	மே	31.7	21.5	30.7	22.8
6	ஜூன்	29.9	22.2	29.5	21.8
7	ஜூலை	28.5	21.3	29.4	21.7
8	ஆகஸ்ட்	29.1	21.7	29.2	21.3
9	செப்டம்பர்	29.1	21.2	28.0	21.6
10	அக்டோபர்	29.0	21.1	29.2	21.3
11	நவம்பர்	30.0	21.1	30.1	21.4
12	டிசம்பர்	28.5	20.7	28.5	20.3

மூலாதாரம் கால நிலை திணைக்களம் -

மகாவலி கங்கை, மாவட்ட மத்தியின் வடிந்தோடும் பிரதான கங்கையாவதுடன், அது முழு தூரத்தில் 110 கி.மீ. க்கு கிட்டிய கண்டி மாவட்ட அருகாமையால் வடிந்தோடும் மகாவலி கங்கையின் ஆரம்ப நீர் ஓடைகளான, ஹட்டன் ஆறு மற்றும் கொத்மலை ஆறு ஒன்று சேர்ந்து மகாவலி கங்கை எனும் பேரில் வடிந்தோட பஸ்பாகே கோரளையின் பொல்வத்துர கிராமத்தில் இருந்தே தொடங்கிறது. அதே போன்று மகாவலி வலையத்தின் பிரதான மலை சிகரமான கொபோநீல கல (உயரம் 1,553,87 மீற்றர்) தோதொழுகல (உயரம் 16,42.57 மீற்றர்) ஆகிய மலைத்தொடர்கள் கண்டி மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. பொதுவாக உயர்ந்த அளவிலான மழைவீழ்ச்சியைக் கொண்ட இவ்வலையம் மகாவலி கங்கை மற்றும் அம்பன் கங்கையின் பிரதான நீர் வளமுள்ள பிரதேசமாகும்.

இலங்கைக்கே உரித்தான தாவரங்கள் மற்றும் வன விலங்குகளுக்கு பாதுகாப்பை பெற்றுகொடுக்கும் நகல்ஸ் மழைத்தொடர் மாவட்டத்தின் இயற்கை அழகில் தலை சிறந்த இடமாகும்.

ஹந்தான மலைத்தொடர், அம்புளுவாவ மலை, பலன மலைத்தொடர், அலகல்ல மலை போன்ற மலை பிரதேசங்கள் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளதுடன், கடியன்லென, கலபொட ஆகிய அழகான பெருமளவிலான நீர் வீழ்ச்சிகள் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்நீர் வீழ்ச்சிகளில் பெறும் அளவு பிரசித்தியற்ற நிலையில் இருப்பினும் அவை அழகில் மிக உயர் நிலையுடையதாகும்.

இயற்கை தாவரங்கள்

கண்டி மாவட்டத்தின் முழு நில அளவு 194,000 ஹெக்டயார் ஆகும். மாவட்டத்தின் முழு பூமி அளவில் 21% வீதம் அதாவது 41,521 ஹெக்டயார் காடுகளாக உள்ளன. கடுமையாக பாதுகாக்கப்படும் பிரதேசங்களாக காக்கவேண்டிய இக்காடுகளில் 23,317ஹெக்டயார் நில அளவு மிகவும் அடர்த்தியான காடுகளாவும், ஹெக்டயார் 10759 திறந்த காடுகளாளவும், ஹெக்டயார் 7,445 அளவு காடு பயிருதலாகவும் உள்ளது. உயர் மலை உச்சிகளை ஒற்றியதாக அதிக அடர்ந்த காடுகள் காணப்படுகிறது. இதனால் பிரதேசத்தின் நீர் ஊற்றுகள் நீடித்திருப்பதற்கு இவ்வனாந்தர நில பரப்பினை பாது காத்துக்கொள்ளல் மிக அவசியமாக உள்ளதுடன், பல்வேறு மனித செயற்பாடுகளினால் இதன் நீடித்திருத்தலுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படும் சந்தர்பங்கள் உள்ளன.

நகல்ஸ் பாதுகாக்க வேண்டிய பகுதிக்குரிய பிரதேசத்தின் பெருமளவான நிலப்பரப்பு கண்டி மாவட்டத்திற்குரியது. இலங்கைகே உரித்தான தாவரம் மற்றும் வனவிலங்குகள் பலதின வசிப்பிடமாகிய இவ்வலயம் கடும் இயற்கை பாதுகாப்பு பகுதியாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஹன்தான மலைத்தொடர், வாக்கரவத்த காடு மற்றும் உடவத்த கலே ஆகியவை கண்டி நகர் அருகில் அமைந்துள்ளது. ஹன்தான மலைத்தொடர் கடும் சுற்றாடல் அச்சுறுத்தல்களுக்குட்பட்ட பிரதேசமாகும்.

வனவிலங்குகள்

கண்டி மாவட்ட காடுகளை ஒத்தி பெறும் வனவிலங்கு கூட்டமொன்று வாழ்வதுடன் யானை, சிறுத்தை, குரங்கள், காட்டுப்பன்றி, மான், அட்டை மான் ஆகியவை முக்கிய இடம் வகிக்கும்.

உடதும்பர, மினிபே ஆகிய பிரதேசங்களில் காட்டு யானைகள் காணக் கூடியதாக உள்ளதுடன், இரந்தெனிகலை சரணாலயம் மற்றும் உடதும்பர மீமுரே ஆகிய பிரதேசங்களில் அநேகமான நேரங்களில் காட்டு யானைகள் நடமாடுகின்றன. இப்பிரதேசங்களில் பெரிய அளவில் படர்ந்திருக்கும் அடர்ந்த காட்டுக்குள் சிறுத்தைகளும் வாழ்வதுடன் கம்பொல, ஹந்தான, பாத்தஹேவா ஹட்டை போன்ற பிரதேசங்களிலும் சிறுத்தைகள் தொடர்பாக இடைக்கிடையே அறியக்கிடைக்கின்றது. மாவட்டத்தின் எல்லா பிரதேசங்களிலும் காடுகளை ஒத்தியதாக குரங்கு, மந்தி மற்றும் காட்டு பன்றிகள் வசிப்பதுடன், இரந்தெனிகலை சரணாலயத்தை ஒத்திய பகுதியில் பல வகையான வனவிலங்குகளை காணக்கூடியதாக உள்ளது. இதை தவிர கவனிக்க தக்க பறவை இனங்களும் இப்பிரதேசத்தை ஒத்தி வாழ்கின்றன.

வனவிலங்குகளால் ஏற்படும் பிரச்சினைகள்

மாவட்டத்தின் சில பிரதேசங்களில் விவசாயத்துறை மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு வனவிலங்குகளால் ஏற்பாடும் தீங்குகள் மிக அதிகமாக உள்ளது. உடதும்பர, மினிபே மற்றும் பாத்தஹேவாஹட்டை பிரதேச செயலகப் பிரிவுகளின் சில பகுதிகளின் கிராமத்திற் பிரவேசிக்கும் காட்டு யானைகளால் விவசாய அலுவல்களுக்கும் மனித வாழ்க்கைக்கும் அபாயங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

உடதும்பர பிரதேசத்தில் மீமுரே மற்றும் பிரதேசத்தின் தெற்கில் அமைந்துள்ளதேவஹந்திய, மடுகல்ல மற்றும் மினிபே பிரதேச செயலக பிரிவின் அம்பகஹபெலஸ்ஸ, ஹந்தகனாவ, உடகலதெபொக்க, கலமுதுன ஆகிய பகுதிகளில் இப்பிரச்சினை பெரிதாக பாதிப்பினை ஏற்படுத்துகிறது.

குரங்கு மற்றும் காட்டு பன்றிகளால் பயிர்ச்செய்கைகளுக்கு ஏற்படும் அழிவு மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களிலும் காணக் கூடியதாக உள்ளதுடன் இது கட்டுப்படுத்த கடினமான ஓர் பிரச்சினையாகிக் கொண்டு இருக்கிறது.

வாழ்க்கை முறை

கண்டி மாவட்டத்தின் மொத்த சனத்தொகை 1,451,836 ஆவதுடன், அதில் நகரபுற, கிராமப் புற மற்றும் தோட்டத்துறை ஆகிய மூன்று துறையையும் பிரதி நிதித்துவப் படுத்தும் சனத்தொகை அமைப்பொன்றையும் காணக்கூடியதாக உள்ளது. மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 180,023 (12%) நகர புறப் பிரிவாவகவும் 1,181,438 (81%) கிராம புறத்தாரகவும், 90,375 (7%) தோட்டத்துறையையும் பிரதி நிதித்துவப்படுத்துகிறனர்.

பொதுவாக எடுத்துகொண்டால் கண்டி மாவட்டத்திற்குள் விவசாய பொருளாதார முறையொன்றை காண முடியும். காணி உபயோகிக்கும் முறையினை நோக்குகையில் பயிரிட்டுள்ள வயல் நில அளவு ஹெக்டயார் 16,129 ஆவதுடன், அது மாவட்டத்தின் முழு காணி அளவில் 8.3% அளவாகும். அவ்வாறே தேயிலை, இறப்பர், பட்டை மற்றும் ஏனைய பயிர்கள் முறையே 22,559 , 1,230 , 4729 மற்றும் 17,564 ஹெக்டயார்கள் ஆகும்.

12% அளவிலான நகர பிரதேசத்தில் அதிக சன கனளவை (தொகையினை) காணக் கூடியதாக உள்ளதுடன், அவர்கள் கைத்தொழில் மற்றும் ஏனைய தொழில் துறைகளின் (சேவைகள்) கீழ் தன் சீவனோபாயங்களில் ஈடுபடுவதை காணலாம். அதற்கமைய இப்பிரிவுகளினூடாக நகர புற மக்கள் மாவட்டத்தின் பொருளாதாரத்திற்கு செய்யும் பங்களிப்பு மிகச் சிறந்ததாகும்.

நீர்ப்பாசன தொகுதி

கண்டி மாவட்டத்தின் நீர்பாசன தொகுதிளைப் பார்க்கும் போது மினிபே வேலைத்திட்டம் முரபொல எல வேலைத்திட்டம், கம்பொலவெல வேலைத்திட்டம், உடுகொட பண்டார எல வேலைத்திட்டம் பிரதான நீர்பாசன தொகுதிகளாக அறிமுகப்படுத்தப்படும்.

கண்டி மாவட்டத்திற்குரிய ஒரே ஒரு கமநல குடியேற்றமாக மினிபே வேலைத்திட்டத்தை அறிமுகம் செய்ய முடியும். மினிபே பிரதேச செயலகக்குரிய இத்திட்டத்தின் நிரூற்று மகாவலி ஆறு ஆகும். இங்கே பிரதான ஓடை மினிபே இடதுபக்க மதில் ஆவதுடன் நீளம் 74 கி. மீட்டர் ஆகும். அத்துடன் பிரிக்கப்பட்ட ஓடைகள் 1,556ல் 491 ஓடைகள் உட்படுவதுடன், மினிப்பே வேலைத்திட்டத்தின் கீழ் அறுவடை 18,595 ஏக்கர் ஆகும். பயிர்களைப் பிரிக்கும் போது நெல் மேலதிக பயிராக அறிமுகம் செய்வதுடன், பயிர் 80% நெற் பயிர் செய்கை ஆவதுடன் மிகுதியான 20% மேலதிக பயிர்களாகும்.

முரபொல எல வேலைத்திட்டம் கண்டி மாவட்டத்தில் தெல்தொட்டை மற்றும் பாத்தஹேவாஹெட்ட 02 பிரதேச செயலகங்களுக்குரியதுடன் பிரதான ஓடையின் நீலம் 15.5 கிலோமீட்டர் ஆகும். இங்கே பயிர் அறுவடை 1,200 ஏக்கர் ஆவதுடன், நெல்லும் மேலதிக பயிர்களும் உண்டு. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் பிரதி இலாபம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை 2,600 ஆகும்.

பாததும்பர, பன்வில மற்றும் குண்டசலை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குள் நடைபெறும் உடுகொட பண்டார எல திட்டத்தின் நீரூற்றுக்கள் ரவன் ஒய என்றழைக்கப்படுவதுடன், ஓடையின் நீளம் 7.1 ஆகும். இங்கே அறுவடை 405 ஏக்கர் ஆவதுடன், நெல் மற்றும் மரக்கரி பயிர்களும் ஆகும். உடுகொட பண்டார எல வேலைத்திட்டம் முலம் 1,000 குடும்ங்கள் பிரதி இலாபம் பெறுகிறார்கள்.

உலபனை ஓடை நீரூற்றுக்களை மையமாகக் கொண்டு கம்பொலவெல ரஜ எல வேலைத்திட்டம் கங்க இஹல கோரளை பிரதேச பிரிவிற்குள் அமைந்துள்ளது. இங்கே பிரதான ஓடையின் நீலம் 12.8 இலாபம் பெற்றுக்கொள்ளும் குடும்பங்கள் 1000 ஆகும்.

1.2 மாவட்ட செயலகம் பற்றிய அறிமுகம்

மத்திய மாகாணத்தின் பிரதான மாவட்டமான கண்டி மாவட்டமான பிரதேச செயலகப் பிரிவுகள் 20 மற்றும் உள்ளூராட்சி அதிகார பிரதேசங்கள் 22யும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் 1188யும் கொண்டுள்ள கண்டி மாவட்டத்தின் முழு சனத்தொகை 1,468,034 ஆகும். முழு சனத்தொகையில் 74.4% சிங்களவர்கள், 11.2% தமிழர்கள் 13.9% முஸ்லிம்களும் (சோனகர்கள்) மற்றும் 0.5% மான ஏனைய இனங்களையும் கொண்டுள்ளது.

இடைக்கிடையே பல வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளான போதிலும், மலை நாட்டு இராஜதாணி சுயானதீனமாக இருந்த போதிலும், 1815 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் திகதி கையொப்பமிட்ட "உடரட்ட கிவிசும" (மலைநாட்டு ஒப்பந்தம்) உடன் அதன் சுயாதீன நிலையும் சிதைவடைந்து முழு இலங்கையும் பிரித்தானியரின் கிரீடத்தின் காலணித்துவ நாடாக ஆனது. அதன் பிரதிப்பலனாக மலை நாட்டில் இருந்த அரசனை தலைமையாகக் கொண்ட உள்ளாட்டு அரச நிர்வாக அமைப்பு முழுமையாக சிதைந்துடன் பிரிதானியரின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்த நிர்வாக முறையொன்று எழுந்தது. அதற்கேற்ப பிரிதானிய ஆட்சி காலத்தில் மத்திய மாகாணத்தின் பிரதான நிர்வாக உத்தியோகத்தராக கண்டி கச்சேரியின் அரச அதிபர் செயற்பட்டார். சரித்திர தகவல்களின் பிரகாரம் கண்டி கச்சேரி கி.பி. 1825 ல் கண்டி அரச மாளிகையை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கண்டியின் முதலாம் அரச அதிபராக வெள்ளை இனத்தை சேர்ந்த திரு. ஜோர்ஜ் டர்னர் அவர்கள் 1825-1837 வரை காலத்தில் பதவி வகித்துள்ளார்.

கண்டி அரச மாளிகையை மையமாக் கொண்டு நடாத்திச் சென்ற கண்டி கச்சேரி 1868 இல் □ரீ தலதா மாளிகையின் பத்திருப்புக்கு எடுத்து சென்றுள்ளதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளன. அவ்வேளையில் கண்டி ஆட்சி காலத்தின் அரச அதிபராக கடமை புரிந்தவர் வெள்ளை இனத்தவரான சேர்ந்த திரு. பீ. டப்ல்யூ. பேப்ரூக் அவர்கள்.

பிற்காலத்தில் பல்வேறு காரணங்களினால் கண்டி கச்சேரி கண்டி தபால் கட்டிடத்திற்கு தற்காலிகமாக எடுத்து சென்றுள்ளனர். பின்னர் 1880ல் □ரீ தலதா மாளிகைக்கு அருகில் நிர்மாணித்த கட்டிடத்திற்கு (பிற்காலத்தில் நீதி மன்ற கட்டிடம்) எடுத்துச் சென்றுள்ளதுடன், அவ்வேளையில் அரச அதிபராக செயலாற்றி இருப்பது வெள்ளையரான. திரு. எஸ். பீ. டெம்ப்லர் ஆவார். அன்று முதல் சுமார் 80 வருடங்கள் தொடர்ச்சியாக அவ்விடத்தில் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது.

1957 ஆம் ஆண்டில் கண்டி கச்சேரி தற்போது கண்டி யட்டிநுவர வீதியில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு எடுத்து சென்றுள்ளதுடன், அச்சந்தர்ப்பத்தில் அரச அதிபராக கடமையாற்றியவர் திரு. ஏ. பீ. எஸ். என். புள்ளையார் அவர்கள் ஆவார். 1946 ம் ஆண்டு முதல் இலங்கை சிவில் சேவை உத்தியோகத்தர்கள் அரச அதிபர்களாக பணிபுரிந்துள்ளனர். 2015 ஆம் ஆண்டு முதல் 2018 செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை கண்டி அரச அதிபராக இலங்கை நிர்வாக சேவையின் விஷேட தரத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தரான

திரு. எச். எம். பீ. ஹிட்டிசேகர மாவட்டத்திற்காக பாரிய சேவையொன்றை நிறைவேற்றிவிட்டு ஓய்வுபெற்றார். பின்னர் 2018 அக்டோபர் 01 திகதி முதல் நவம்பர் 18ஆம் திகதி வரை கண்டி பதில் பணிப்புரியும் அரச அதிபராக இலங்கை நிர்வாக சேவையின் விஷேட தரத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தரான கேகல்லை மாவட்ட செயலாளர் திரு. எல். ஜே. எம். ஜீ. சந்திரசிறி பண்டார அவர்கள் பணிப்புரிந்தார்கள். அதற்கமைவாக தற்போதைய அரச அதிபராக, பல்வேறு அரச நிறுவனங்களில் சேவை புரிந்து அனுபவம் பெற்ற இலங்கை நிர்வாக சேவையின் விஷேட தரத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தரான திரு. டி. என். ஜீ. ஜீ. திஸ்ஸ கருணாரத்ன அவர்கள் 2018 நவம்பர் மாதம் 19 திகதி இன்று வரை பாரிய அளவிலான சேவையொன்றை நிறைவேற்றுகிறார்.

மாவட்ட செயலகம் மற்றும் அதனுடன் இணைந்த 25 பிரிவுகள் மாவட்ட செயலக அலுவலக கட்டிடத் தொகுதிக்குள் அமைத்துள்ளதுடன், கங்க வட்டகோரளை பிரதேச செயலக அலுவலகமும், அரசாங்க கணக்காய்வு அலுவலகமும், பௌத்த அலுவல்கள் திணைக்களம் மற்றும் தேர்தல் திணைக்களமும் இக்கட்டிடத்துக்குள் ஸ்தாபித்துள்ளன.

.13செயற்பணி ,பெறுமானங்கள் , ,நோக்கு .

நோக்கு

கண்டி மாவட்ட செயலகத்தை

இலங்கையிலே மிகச் சிறந்த

நிருவாக ஸ்தாபனமாக ஆக்குதல்.

பெறுமானங்கள்

- ஒழுக்கத்துடன் கூடிய பண்பான சேவை
- சிரேஷ்ட பிரஜைகளுக்கு அக்கரை செலுத்தல் மற்றும் கௌரவித்தல்
- அங்கவீனர்களுக்கு முதலிடம்
- குழு என்ற உணர்வில் செயல்படுதல்
- சுற்றாடலுக்கு உகந்த அலுவலக சூழல்
- அறிவு முகாமைத்துவ நிலையமாகச் செயல்படுதல்
- ஆகக் கூடிய நுகர்வோர் பணி மூலம் சேவையைப் பெறுபவர்களுக்கு திருப்தியைப் பெற்றுக்கொடுத்தல்

செயற்பணி

அரச கொள்கைகளுக்கு ஏற்ப மாவட்டத்திற்கே

உரித்தான பெருமை மிக்க மரபுகளைப்

பாதுகாத்து கண்டி மாவட்டத்தை

நிலைபேறான அபிவிருத்தியை நோக்கிக் கொண்டு செல்லுதல்.

தரக் கொள்கை

“ISO 9001; 2008 சர்வதேச சேவைத்

தரங்களுக்கு ஏற்ப

இடைவிடாமல் முன்னேற்றத்தை

நோக்கும்

முறைசார் நிர்வாகத் தொகுதியினூடாக

சேவை பெறுபவர்களுக்கு

ஆகக் கூடிய நுகர்வோர் திருப்தியைப்

பெற்றுக்கொடுத்தல்”.

4.1மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் பிரதான அலுவல்கள்

- பிரதேச செயலகங்களை ஒருங்கிணைப்பு, மேற்பார்வை மற்றும் அவ் உத்தியோகத்தர்களின் அலுவலக அலுவல்களை (உத்தியோகத்தர்களின் பதவியில் நிரந்தரமாக்கல், தடை பரீட்சைகளை நடாத்தல், பதவி உயர்வு/ பதவி கால நீடிப்பு மற்றும் உத்தியோகத்தர்களின் வேதனக் கடன் முற்பணம் பெற்றுக்கொடுத்தல் போன்ற அலுவலக வசதிகளை ஒழுங்குசெய்தல்).

- மாவட்டத்திற்குள் அமைந்துள்ள 1188 பிரிவுகளின் கிராம உத்தியோகத்தர்களுக்கான அலுவலக கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் அவர்களின் மனத் திருப்தியை ஏற்படுத்தல்.

- □ரீ தலதா மாளிகை தலைமையான மல்வத்து , அஸ்கிரி மஹா விஹாரை மற்றும் ஏனைய பௌத்த வணகஸ்தலங்களின் அலுவல்கள், □ரீ தலதா பெரஹர (தெருவிழா) ஒழுங்குபடுத்தல் அலுவல்கள், மாவட்ட சமயப் பாதுகாப்பு அதிகார சபையின் அலுவல்கள் உட்பட்ட சமய அலுவல்கள்.

- இந்து, இஸ்லாம், கத்தோலிக (கிருஸ்தவ) மற்றும் ஏனைய சமயங்களை ஒத்த விடயங்கள்.

- மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மாவட்ட விவசாயக் குழு, மாவட்ட வீட்டுக்குழு, மாவட்ட சுற்றாடல் சட்டங்களை செயற்படுத்தும் குழு, மாவட்ட பாதுகாப்பு/ இடர்பாட்டு (அனர்த்த) முகாமைத்துவக் குழு மற்றும் மாவட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஆகியக் குழுக்களை நடாத்துவதன் மூலம் மற்றும் மாவட்ட செயலாளரின் தலைமைத்துவத்தில் நடாத்த வேண்டிய அனைத்துக் கூட்டங்களையும் ஒழுங்கு செய்தல் மற்றும் ஏனைய அசர அலுவலகங்களையும் ஒருங்கிணைத்தல்.

- பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கை மற்றும் நீர், மின்சாரம் உட்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுடன் மாவட்ட முதலீட்டு திட்டத்தினை செயற்படுத்தல்.

- கண்டி நகர் மற்றும் மாவட்டத்தை விஷேடமாக கவனத்தில் கொண்டு ஒப்படைக்கப்படும்தேசிய அளவினால் விழாக்கள் மற்றும் பல்வேறு அரச விழாக்களை ஏற்பாடு செய்து நடாத்துதல்

- தேர்தல் திணைக்களத்துடன் ஒருங்கிணைத்து மாவட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவல்களை நடாத்துவித்தல்

- புதிய அரச உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல் மற்றும் தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் அரச உத்தியோகத்தர்களின் திறமைகள் மற்றும் தேர்ச்சியினை மேன்மை படுத்துவதற்காக காலத்தின் தேவைக்கமைய பயிற்சி வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் நடாத்துதல்.

- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் நியதிச் சட்டமுறை மற்றும் அபிவிருத்தி ரீதியான அலுவல்களை மிகச் சிறந்த முறையில் நிறைவேற்றல் மற்றும் சிறந்த நிதி நிர்வாகத்தினை ஏற்படுத்தலுக்காக அலுவலக மேற்பார்வை முறையொன்றை ஏற்படுத்தி அதனை வருட முழுவதும் உள்ளக கணக்காய்வு அலுவலகர் குழாமினால் பரிசோதனை செய்வதல், திருத்தச்செய்தல் மேலும் வழி காட்டல்களை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- பொது மக்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்துவதற்கான பல்வேறு அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்தல், வளங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் திட்டமிடல் அலுவல்களை நிறைவேற்றல்.

- மாவட்ட சமூர்த்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்.

- மாவட்ட செயலாளர்/ அரசங்க அதிபரின் மேற்பார்வையில் இருக்கு சிறுதொழில் அபிவிருத்தி பிரிவு, நுகர்வோர் அதிகாரச்சபை, அளவை அலகு தரப்படுத்தல் மற்றும் சேவைகள் பிரிவு, சமூக பாதுகாப்புப் பிரிவு, மாவட்ட ஊடகப் பிரிவு, புள்ளி விபரப்பிரிவு, மோட்டார் வாகன போக்குவரத்து, கலாச்சார மற்றும் பௌத்த அலுவல்கள், அனர்த்த முகாமைத்துவ அலுவல்கள், மாவட்ட காணி உபயோகத்திட்டமிடல் பிரிவு, தேசிய நீர்வாழ் (உயிரினங்களை) விவசாய பரவலாக்கல் பிரிவு, சமூக சேவை பிரிவு, உற்பத்தி திறன் பிரிவு, மனித வள மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவு, குழந்தை மற்றும் மகளிர் நடவடிக்கை, விளையாட்டு பிரிவு விவசாய மற்றும் திவி நெகும (வாழ்வின் எழுர்ச்சி) ஆகிய பிரிவுகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வை.

- பொது மக்களிடமிருந்து கிடைக்கும் முறைபாடுகள், மனுகள், மனக்குறைகள், கோரிக்கைகள் ஆகியவை தொடர்பாக குறிப்பிட்ட பிரிவுகளில் இருந்து தகவல்களை பெற்றுக்கொண்டு தீர்வுகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் மாவட்ட நிருவாகம் மேலும் பிரதேச நிருவாகத்துக்குசிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக கிடைக்கும் மனுக்கள், முறைப்பாடுகள்தொடர்பாக பக்கசார்பற்ற (பரிசோதனைகளை) விசாரணைகளை நடாத்துவதனூடாக சிறந்ததோர் நிர்வாகத்தை ஏற்படுத்தல்.

- கண்டி மாவட்டத்திற்குள் பலா, ஈரப்பலா மரங்களை வெட்டி சாய்ப்பதற்கான மூன்றுக்கு (03) மேற்பட்ட 15ஐ விடக் குறைந்த சந்தர்பங்களில் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், அனுமதித்தல் மற்றும் மரங்களின் எண்ணிக்கை 15 ஐ விடவும் அதிகமாகும் பட்சத்தில் விவசாய அமைச்சின் செயலாளரிடம் சிபார்சினை பெற்றுக்கொடுத்தல்.

- கண்டி மாவட்டத்திற்குள், வெடிவைக்கும் ஆயுதங்களுக்கான அனுமதி பத்திரங்களை வழங்குதல், வருடாந்தம் வெடிபொருட்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

- மாவட்ட செயலக கட்டிடத்தொகுதியில் உள்ள அலுவலகங்களுக்கு நீர், மின்சார மற்றும் உள்ளக தொலைப்பேசி வசதிகளை செய்து கொடுப்பதன் மூலம் மக்களுக்கான சேவைகளை வழங்குவதற்கான அடிப்படை வசதிகளை வழங்குதல்.


- மாவட்ட செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்தினூடாக மேற்பார்வையிடும் அலுவலகங்களின் அலுவலக அலுவல்களை நிறைவேற்றல் .

- கண்டி மாவட்டத்தில் நிகழும் இயற்கை மற்றும் சடுதியாக ஏற்படும் அனர்தங்களின் போது அனர்தத்திற்கு உட்பட்ட மக்களுக்கு துரிதமாக வசதிகளை செய்து கொடுப்பதற்கு தேவையான விரைவான நடவடிக்கைகளை மேற்கொள்ள மேலும் நீண்ட கால தீர்வுகள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் உரிய அலுவலகங்களுடன் ஒருங்கிணைந்து தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

- மாவட்டத்தின் விவசாய அலுவல்களை அபிவிருத்தி செயற்வதற்கு தேவையான அலுவல்களை ஒருங்கிணைப்பு மற்றும் அரசினால் பொது மக்களுக்கு சலுகைகள் வழங்குவதற்கான அலுவல்கள் (உதா;- பசலை சலுகைக்கொடுப்பனவு) துரிதமாக நிறைவேற்றிக் கொடுப்பதற்கு தேவையான ஒழுங்கிணைப்பு அலுவல்களை நிறைவேற்றல் .

- மாவட்ட நிருவாக விடயப் பரப்புக்குள் கண்டி நகர் மற்றும் கண்டி மாவட்டத்திற்கு முக்கியமாக காலத்துக்குரியதாக ஒப்படைக்கப்படும் விஷேட அலுவல்களை ஏற்பாடுசெய்தல் நிருவகித்தல் மேலும் ஒழுங்குப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

1.5 ஒழுங்கமைப்பு அட்டவணை



1.6. மாவட்ட செயலாளரின் மேற்பார்வையின் கீழ் வரும் பிரதான பிரிவுகள்

1. உள்ளக கணக்காய்வுப் பிரிவு	18.கணிப் பிரிவு
2. மத அலுவல்கள் / மொழி ஒருங்கிணைப்புப் பிரிவு	19. வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு
3. மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒழுங்மைப்பு அலகு	20. கலாசாரப் பிரிவு
4. அளவை அலகு தரம் மற்றும் சேவை பிரிவு	21. உற்பத்தித் திறன் பிரிவு
5. சிறு கைத்தொழில் பிரிவு	22. சமூர்த்திப் பிரிவு
6. மோட்டார் வாகனப் பிரிவு	23. ஸ்தாபனப் பிரிவு
7. நுகர்வோர் நடவடிக்கைப் பிரிவு	24. மாவட்ட சிறார் மற்றும் மகளிர் அலுவல்கள் பிரிவு
8. நீர்வாழ் பயிர் செய்கை அபிவிருத்தி பிரிவு	25. வெடிபொருட்கள் பிரிவு
9. மாவட்ட காணி உபயோகிப்புத் திட்டமிடல் பிரிவு	26. விளையாட்டுப் பிரிவு
10. மாவட்ட ஊடகப் பிரிவு	27. மாவட்ட விவசாயப் பிரிவு
11. மனித வள அபிவிருத்திப் பிரிவு	28. கணக்குப் பிரிவு
12. புள்ளி விபரப் பிரிவு	29. பொலிஸ் ஆணைக்குழு
13.அபிவிருத்திப் பிரிவு	30. தேர்தல்
14. சமூகப் பாதுகாப்புப் பிரிவு	31. முயற்சியான்மை அபிவிருத்தி அலகு
15. சமூக சேவைகள் பிரிவு (வயோதிபர்/உளவள ஆலோசனை)	32. அபாயகர ஒளடதங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு
16. திட்டமிடல் பிரிவு	33. இணக்க சபை அலகு
17. பொறியியலாளர் பிரிவு	

1.7 கண்டி மாவட்ட செயலகத்தின் கீழ் இயங்கும் பிரதேச செயலகங்கள்

தொ .இ .	பிரதேச செயலகம்	தொ .இ .	பிரதேச செயலகம்
1	கங்கவட்டக்கோரளை	11	மெததும்பர
2	குண்டசாலை	12	உடதும்பர
3	பாத்ததும்பரை	13	மினிப்பே
4	பன்வில	14	அக்குரணை
5	யட்டிநுவர	15	பூஜாப்பிட்டி
6	உடுநுவர	16	ஹாரிஸ்பத்துவ
7	உடபலாத்தை	17	தும்பனை
8	தொழுவா	18	ஹத்தரலியத்த
9	பாத்தஹேவாஹட்டை	19	கங்க இஹல கோரளை
10	தெல்தொட்டை	20	பஸ்பாகே கோரளை

2. அத்தியாயம்

முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

2.1விசேட நிகழ்வுகள்




மாவட்ட செயலாளர் தலைமையில் நடைபெற்ற 2021 வருட ஆரம்ப பிரித் ஓதல், உறுதியுரை மற்றும் காலை சந்திப்பு




மாவட்ட செயலாளர் தலைமையில் நடைபெற்ற 73 வது சுதந்திர தின விழா







2021 எசல பெரஹரா




அரசியல் தலைமைகளுடன் நடாத்தப்பட்ட கிராமிய கீழ்க்கட்டுமான வசதிகள் கமிட்டி - 2021.01.27





கௌரவ நீர்ப்பாசன அமைச்சரும் அரச பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷ அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்ட கிராமிய கீம்க்கட்டுமான வசகிகள் கமிட்டி - 2021.01.12





மீமுரே கிராமத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு முன்னரான கலந்துரையாடல் - 2021.01.25





முதியோர் கொடுப்பனவு வழங்கல்





யடினுவர பிரதேச செயலக புதிய கட்டிடத் திறப்பு விழா

கௌரவ நீர்ப்பாசன அமைச்சரும் அரச பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சருமான சமல் ராஜபக்ஷ உட்பட கண்டி மாவட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் கௌரவ ஆளுனர் கண்டி மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் பங்கேற்றனர்.





கண்டி மாவட்ட பௌத்த மதப் பாதுகாப்பு பீடத்திற்கான தேர்தல்





2021 மார்ச் 08 ஆம் திகதிய சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற மகளிர் முயற்சியான்மையாளர் கண்காட்சி





மகளிர் தின விழா 2021.03.08





தொடம்வல வலது குறைந்தோர் பாடசாலை சிரமதானம்





மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் கௌரவ பா. உ. சட்டத்தரணி வசந்த யாபா பண்டார அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்





நீர்ப் பாதுகாப்புக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சி





மெதகலே கிராமத்தின் பிரச்சனைகளை கண்டறிதற்காக அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல்





அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெற்ற மினிபே விவசாயக் குழுக்கூட்டமும் கண்காணிப்பு விஜயமும்




தேசிய வளங்கள் எழுச்சிக் குழுக் கூட்டம் (ஏப்ரல் மாதம்)




மாவட்ட செயலாளரின் தலைமையில் நடைபெற்ற மீமுரே கிராமத்துடனான கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு முன்னரான விடய ஆய்வுக் கலந்துரையாடல்




கொரோனா நோய்த்தடுப்பு தொடர்பாக நடந்த சந்திப்பு (மே மாதம்)




தேசிய விளையாட்டு தினம் ஒன்றை பெயரிடுவதற்குச் சமாந்தரமாக பொதுமக்களுக்காக நடாத்தப்பட்ட தேகாரோக்கியப் பயிற்சி நிகழ்ச்சி




மூலோபாய நகர அபிவிருத்தி விசேட நிகழ்ச்சி





சஹன் எளிய நிகழ்ச்சி





ஸ்வ அபிமானி தேசிய விருது வழங்கல் விழாவுக்கு சமாந்தரமாக நடைபெற்ற ஸ்வ சக்தி கௌரவ விருது வழங்கல் நிகழ்ச்சி



கௌரவ பா.உ. வசந்த யாபா பண்டார அவர்களின் தலைமையில் “ஒரு கிராம அலுவலர் பிரிவில் ஒரு முயற் சியான்மையாளரை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்” கீழ் யடினுவர பிரதேச செயலாளர் பிரிவில் பயனாளிகளுக்கு இயந்திரங்கள் பகிர்ந்தளித்தல்



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தும்பனே பிரதேச செயலாளர் பிரிவில் நடாத்தப்பட்ட இரத்ததான முகாம்



பசி இல்லாத பசுமை நிறைந்த மத ஈடுபாட்டுடனான நாட்டைக் கட்டி எழுப்பும் நோக்கிலான நிகழ்ச்சி - யடினுவர பிரதேச செயலாளர் பிரிவு



கோவிட் தொற்றைத் தோற்கடித்து சிறுவர் வாழ்வை வெற்றிகொள்வோம் என்ற தொனிப்பொருளில் 2021.03.11 ஆம் திகதி யடினுவர பிரதேச செயலாளர் பிரிவில் நடைபெற்ற நிகழ்ச்சி



கலகெதர பிரதேச செயலாளர் பிரிவில் “லிய சக்தி” நடமாடும் விற்பனை நிலையத் திறப்பு விழா



மல் உயனட என்ற தொனிப்பொருளில் யடினுவர பிரதேச செயலாளர் பிரிவில் மக்களுக்கு தெளிவூட்டல்



கௌரவ சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தலைமையில் கலகெதர பிரதேச செயலாளர் பிரிவில் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கல்



கௌரவ போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம மற்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் வீரக்கொடி தலைமையில் கலகெதர பிரதேச செயலாளர் பிரிவில் 398 கும்புறேகம பிரிவில் பிரஜைகள் பொலிஸ் காரியாலயம் திறந்து வைக்கப்படல்



2021.02.04 ஆம் திகதி சுதந்திர தினத்தையொட்டி தாவர நடுகை நிகழ்ச்சித்திட்டம் தும்பனே பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.



2021 ஆம் ஆண்டு தும்பனே பிரிவில் நடைபெற்ற சாகித்திய விழா



கலகெதர பிரதேச செயலாளர் பிரிவின் நிலதறு அபிமன் விழா - 2021



தும்பனே பிரிவில் வலது குறைந்தோருக்கான கொடுப்பனவு வழங்கல்



கண்டி மாவட்ட பா. உ. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் திலக் ராஜபக்ஷ அவர்களின் பங்கேற்புடன் ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவில் சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்ட ஆரம்பம்.



ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவில் பயிர்ச்செய்கைக் காணிகளின் பாதுகாப்புக்கு பாதுகாப்பு வலை வழங்கல்



ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவில் சிறுவர் பாதுகாப்பு இல்லமொன்று நிர்மாணிக்கப்படல் (தித்தபஜ்ஜல)



மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர், பன்வில ஒருங்கிணைப்புக்குழு பிரதித் தலைவர் கமல் பெளிகொள்ள மற்றும் பன்வில பிரதேச சபை உறுப்பினர் நிஹால் ராஜபக்ஷ தலைமையில் 2021- விசேட சௌபாக்யா வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பன்வில, அங்கம்மன கிராம அலுவலர் பிரிவில் திருமதி அமிலா சரோஜனியின் வீட்டுக்கு அடிக்கல் நடல்



மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர், பன்வில ஒருங்கிணைப்புக்குழு பிரதித் தலைவர் கமல் பெளிகொள்ள மற்றும் பன்வில பிரதேச சபைத் தலைவர் ஏ.ஜீ. சேனவிரத்ன மற்றும் பன்வில பிரதேச சபை உறுப்பினர்களான நிஹால் ராஜபக்ஷ, பீ. வரத்தன, உதயங்கனி கருணாரத்ன ஆகியோர் தலைமையில் 2021- சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பன்வில பிரதேச செயலாளர் பிரிவில் விலங்கு வேளாண்மை மூலம் கிராமப் பொருளாதாரத்தை பலப்படுத்தும் நோக்கில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு உரித்துப் பத்திரம் வழங்கல்.



சஹஸ் பெலஹர 2021, வலது குறைந்தோர் தினத்தையொட்டி விசேட தேவையுடைய பன்வில பிரிவின் பிள்ளைகளின் விசேட திறமைகளை வெளிக்கொணரும் நிகழ்ச்சி







2021.12.04 ஆம் திகதி மாவட்ட செயலாளரின் தலைமையில் கண்டி ஸ்ரீ நாத தேவாலயம், கட்டுகஸ்தோட்டை அரச சேவை பயிற்சி நிறுவனம் மற்றும் கம்பளை ஜயமாலபுர ஜயசுமனாராம ஆகிய இடங்களில் நடைபெற்ற தஹம் சரசவி டிப்ளோமா கற்கை நெறியின் ஆரம்ப விழா



மத்திய மாகாண ஆளுனர், அக்குரணை பிரதேச சபைத் தலைவர் உட்பட உறுப்பினர்கள் தலைமையில் அக்குரணை பிரதேச செயலகப் பிரிவில் துனுவில வாவி புனரமைப்பு



கண்டி மாவட்டப் பா.உ. திலக் ராஜபக்ஷ, அக்குரணை பிரதேச சபைத் தலைவர் உட்பட உறுப்பினர்கள் தலைமையில் அக்குரணை பிரதேச செயலக பதிவாளர் பிரிவின் புதிய கட்டிடத் திறப்பு விழா



கண்டி மாவட்டப் பா.உ. திலக் ராஜபக்ஷ, பிரதேச சபைத் தலைவர் உட்பட உறுப்பினர்கள் தலைமையில் நடைபெற்ற அக்குரணை பிரதேச செயலகப் பிரிவின் கிராமிய உற்பத்திப் பொருளாதாரப் பலப்படுத்தல் ஒருங்கிணைப் புக் கூட்டம்



அக்குரணை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்குதல்





அக்குரணை பிரதேச செயலகப் பிரிவின் பதிவாளர் பிரிவிலிருந்து மக்களுக்குத் தேவையான ஆவணங்களை துரிதமாக பெற்றுக்கொள்ள வழி செய்யும் புதிய மென்பொருள் அறிமுகம் செய்யப்படல்



அக்குரணை பிரதேச செயலகப் பிரிவில் மக்கள் தமக்கான சேவைகளைப் பெற்றுக்கொள் வதனை இலகுபடுத்த மொழி உதவி அலகு ஆரம்பிக்கப்படல்



ஹதரளியத்த பிரதேச சபைத் தலைவர் பிரதேச செயலகப் பிரிவில் அடிக்கல் நடல்



உடுநுவர பிரதேச செயலகப் பிரிவின் ஹென்தேனிய சிரிபெரகும் ஆரம்பப் பாடசாலைக்கு கணணி மற்றும் பாடசாலை உபகரணங்கள் வழங்கல்







மேதகு ஜனாதிபதி கோடாபய ராஜபக்ஷ அவர்களின் பங்கேற்போடு நடைபெற்ற உடபலாத்த பிரதேச செயலகப் பிரிவின் கெகுளு துரு உத்யான தேசிய நிகழ்ச்சித்திட்டம்



ஹதரளியத்த பிரதேச செயலகப் பிரிவில் சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல மற்றும் பிரதேச சபை அங்கத்தவர்களின் தலைமையில் மிளகாய் பயிர்ச்செய்கைக்கான பொருட்கள் வமங்கல்.



பா.உ. ஜயந்த கெடகொட தலைமையில் மெததும்பர பிரதேச செயலகப் பிரிவில் சமுர்த்தி வீட்டுத்திட்டக் காசோலை மற்றும் பொருட்கள் வழங்கல் – வை.பீ. மஹரவெல



போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தலைமையில் மெததும்பர பிரதேச செயலகப் பிரிவில் மட்பாண்டக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கான காசோலை வழங்கல்



ஹதரளியத்த பிரதேச செயலகப் பிரிவில் நடாத்தப்பட்ட சுதந்திர ஓவியப்போட்டி.



73வது சுதந்திர தினத்தை யொட்டி மெததும்பர பிரதேச செயலகப் பிரிவில் மர நடுகை



மெததும்பர பிரதேச செயலகப் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட கோவிட் தடுப்புப் பணிகள்





பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் வாகன ஒழுங்குறுத்துகை புகையிரதப் பெட்டிகள், மோட்டார் வாகனக் கைத்தொழில் மற்றும் பிரஜைகள் பொலிஸ் சேவை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தலைமையில் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவில் பால் மாட்டு வளர்ப்பை ஊக்குவிப்பதன் மூலம் பால் உற்பத்திகளை விருத்தி செய்தல் மற்றும் இடை உற்பத்தியாக சேதனப் பசளை உற்பத்தி செய்தல் செயற்திட்டம் – குருதெனிய கிழக்கு / மாளிகாதென்ன



பிரதேச சபைத் தலைவர் மற்றும் அரசியல் பிரதிநிதிகளின் தலைமையில் பாதஹெவாஹெட பிரதேச செயலகப் பிரிவில் மண் சரிவு அபாயம் காரணமாக பதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு வீடமைப்பதற்கான அடிக்கல் நடல் (போபிடிய)





பாதஹேவாஹெட பிரதேச செயலகப் பிரிவில் சிறுவர் சங்கங்களது செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த நிதி இல்லாத காரணத்தினால் உலக சிறுவர் தினத்தையொட்டி “கழிவுப்பொருள்களை சேகரிப்போம் – பணம் சம்பாதிப்போம்” திட்டத்தின் கீழ் பெற்ற வருமானத்தை சிறுவர் சங்க செயற்திட்டங்களுக்குப் பயன்படுத்துதல்



பிரதேச சபைத் தலைவர் மற்றும் அரசியல் பிரதிநிதிகளின் தலைமையில் உலக சிறுவர் தினத்தையொட்டி பசியற்ற பசுமை நிறைந்த மத ஈடுபாட்டுடனான நாட்டைக் கட்டியெழுப்பும் பொருட்டு நாடளாவிய ரீதியில் பலா மரக்கன்றுகள் 100,000 நடும் திட்டத்தின் அங்குரார்ப்பணம்



பாதஹெவாஹெட பிரதேச செயலகப் பிரிவில் நில்தியவர நீர் மூலங்கள் மற்றும் நீர் பெறும் முறைமைகளைப் பாதுகாக்கும் செயற்திட்டத்தின் கீழ் அம்பலம்மான குளத்தை அண்டிய தாவர நடுகை செயற்திட்டம்.



பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் அரச காணிகளில் குடியேறி வாழும் நபர்களுக்கு உரித்து மற்றும் அனுமதிப்பத்திரம் வழங்கும் காணி நடமாடும் சேவை



பஸ்பாகே கோரளை பிரதேச செயலாளர் பிரிவில் காளான் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க உதவி வழங்கல்



நாவலப்பிட்டிய நகரபிதா மற்றும் பஸ்பாகே கோரளை பிரதேச சபைத் தலைவரின் தலைமையில் பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவின் ஹந்துதுன்கல வத்த, "வறிய உங்களுக்கு வீடு" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வீடமைக்க அடிக்கல் நடல்.



நாவலப்பிட்டிய நகரபிதா மற்றும் பஸ்பாகே கோரளை பிரதேச சபைத் தலைவரின் தலைமையில் பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவின் சமுர்த்தி வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தையல் இயந்திரம் வழங்கல்



பஸ்பாகே கோரளை பிரதேச சபைத் தலைவரின் தலைமையில் இங்குரு ஓயா வடக்கு பிரிவின் சௌபாக்யா வீட்டுத்திட்டம்



பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவின் கெந்தோபிடிய லபுவெல்கொடுவ கிராமத்தில் ஏற்பட்ட வெள்ளம்



பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவின் பலன்தோட வடக்கு மற்றும் உடரம்புக்பிடிய ஹொரகட ஓயா பெருக்கெடுத்தமை.



பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவில் கோவிட் தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சி



கௌரவ நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன மற்றும் உதயன கிரிந்திகொட ஆகியோரின் தலைமையில் தெல்தோட்ட பிரதேச செயலகப் பிரிவில் கலஹா உடதெல்தோட்டை அம்பகும்புற ஆற்று அபிவிருத்தி.



கௌரவ நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன மற்றும் கண்டி மாவட்டப் பா.உ. உதயன கிரிந்திகொட ஆகியோரின் தலைமையில் தெல்தோட்ட பிரதேச செயலகப் பிரிவில் சுதுவெல்ல கந்துற ஆற்று அபிவிருத்தி.



கண்டி மாவட்டப் பா.உ. உதயன கிரிந்திகொட மற்றும் பாதஹெவாஹெட பிரதேச சபைத் தலைவர் ஆகியோரின் தலைமையில் தெல்தோட்ட பிரதேச செயலகப் பிரிவில் வீடற்றோருக்கு வீடமைத்தல்.



"தொளுவ ஹுஸ்ம ரெகின தாருன்ய" சங்கத்தால் புஸ்ஸல்லாவ வைத்தியசாலைக்கு 25 கட்டில்கள் வழங்கியமை. 2021.05.17



"ஸ்வேத பத்ம கலா ரசான்சலி 2021" தொளுவ பிரதேச சாகித்திய விழா, 2021.12.09 ஆம் திகதி மாவட்ட செயலாளரின் தலைமையில் இடம்பெற்றது.



தொளுவ பிரதேச செயலகப் பிரிவின் கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கிடையிலான கரப்பந்து சுற்றுப்போட்டி - 2021.04.03



தொளுவ முதியோர் பகல் நேரப் பராமரிப்பு மத்திய நிலையம் –
ஒதுக்கீடு ரூ. 2,500,000/=



சௌபாக்யா வாரத்தையொட்டி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தொளுவ அரலிய உயன விவசாயப் பயிற்சி மத்திய நிலையத்தில் சேதனப் பசளை உற்பத்தி அலகை ஆரம்பித்தல் - 2021.07.07



தொளுவ பிரதேச செயலகப் பிரிவின் தும்பேலவக பசுமை நண்பர்கள் உருவாக்க முனையும் உயிரினப் பல்வகைமைக் குன்றை அமைப்பதற்கான 20 அடி அகல 100 மீற்றர் நீள வேலி வனப் பாதுகாப்பு அதிகாரியின் துணையுடன் அமைக்கப்பட்டது.





பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரும் வாகன ஒழுங்குறுத்துகை புகையிரதப் பெட்டிகள், மோட்டார் வாகனக் கைத்தொழில் மற்றும் பிரஜைகள் பொலிஸ் சேவை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தலைமையில் கங்கவட்ட கோரளை பிரதேச செயலகப் பிரிவில் நடைபெற்ற சௌபாக்யா உற்பத்திக்கிராம நிகழ்ச்சித்திட்டம், அலங்காரப் பூ வளர்ப்பு கருத்திட்டம் – தென்னேகும்புற, உள்பதகும்புற,பல்லேகம, அம்பிட்டிய, உடகம வடக்கு, வெவதென்ன. தொளுவ பல்லேலெகும் தெனிய கெதர கும்புற எல ஒதுக்கீடு ரூ. 1,000,000 முன்னேற்றம் ரூ. 970,000





கண்டி மாவட்ட பா.உ. இரத்தினக்கல் மற்றும் தங்க நகைக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே அவர்களின் இணைப்புச் செயலாளரின் தலைமையில் மினிப்பே பிரதேச செயலகத்தில் 2021.11.10 ஏற்றுமதி விவசாய வலய தேசிய நிகழ்ச்சியை நடைமுறைப்படுத்தல்.





மினிப்பே பிரதேச சபைத் தலைவர் ஏ.எம். எஸ்.பீ. அபேசிங்ஹ, மொரயாய தொகுதி உறுப்பினர் டபிள்யு. ஏ. வீரசூரிய, சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் நிலந்த பண்டார ஆகியோரின் தலைமையில் மினிப்பே பிரதேச செயலகப் பிரிவில் 2021.07.06 ஆம் திகதி சௌபாக்யா உற்பத்திக்கிராம நிகழ்ச்சித்திட்ட, சௌபாக்யா அரிசி மா தயாரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல்.





சர்வதேச சிறுவர் தினத்தையொட்டி ZOOM தொழில்நுட்பத்தினூடு ONLINE கல்வியைத் தொடர மினிபே பிரதேச செயலகப் பிரிவில் க.பொ.த. சா/த மற்றும் உ/த பயிலும் மாணவர்களுக்கு Dialog சிம் அட்டைகள் 2000 வழங்கல்

மினிபே பிரதேச செயலகப் பிரிவில் டெங்கு ஒழிப்புக்குப் பங்களிப்புச்செய்தல். 18 வளைவுகள் பகுதியை துப்புரவு செய்தல்

வேகமான காற்றுக் காரணமாக மினிபே பிரதேச செயலகப் பிரிவின் ஹந்தகனாவ/ மொரயாய/ லுனுமண்டலாகெடிய ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதம்.



மினிபே பிரதேச செயலகப் பிரிவின் புலத்வெல்கதுற கிராம அலுவலர் பிரிவில் 25□ குடும்பங்களுக்கு தூய்மையான குடிநீர் வழங்கல்



மினிபே பிரதேச செயலகப் பிரிவில் திரிய சவிய குறைந்த வருமானம் பெறும் முயற்சியான்மையாளர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்



மினிபே பிரதேச செயலகப் பிரிவில் உற்பத்தித்திறன் கிராமங்களை அமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான கோழி வளர்ப்பு



பூஜாப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் வேவல ருப்பவத்த விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல். பங்கேற்பு கௌரவ பா.உ. குணதிலக ராஜபக்ஷ



கௌரவ பா.உ. குணதிலக ராஜபக்ஷ அவர்களின் பங்கேற்பில் பூஜாப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் 2□21 ஆண்டின் சுதந்திர தினக் கொண்டாட்டமும் உடஹேன வன ஒதுக்கில் மர நடுகையும்



பூஜாப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் சௌபாக்யா உற்பத்திக்கிராம அங்குரார்ப்பணம். பங்கேற்பு கௌரவ பா.உ. குணதிலக ராஜபக்ஷ



பூஜாப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவின் உடுமுதுன ஸ்ரீ பூர்வாராம விகாரையில் நடைபெற்ற தேசிய தொலைக்காட்சி போயா தின நிகழ்ச்சி – கர்ப்பிணித் தாய்மார்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குதல்



பூஜாப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் கொரோனா காலத்தில் தொழில் இழந்தோருக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்குதல்



பூஜாப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் சமுர்தி பெறுவோர் மற்றும் பெண் முயற்சியான்மையாளர்களது உற்பத்திகளின் சந்தை



பிரதேச ஒருங்கிணைப்புக்குழு உப தலைவர் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கமல் பெளிகொள்ள தலைமையில் சௌபாக்யா கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெனிலா உற்பத்தியாளர்களுக்கு ஆவணங்களைக் கையளித்தல்



பூஜாப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் தடுப்பூசி ஏற்றல் நிகழ்ச்சித்திட்டம்



பூஜாப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் ஸ்ரீ பூர்வாராம அபிவிருத்திப் பணிகள் – ரூ. □5 இலட்சம்



பாதும்பற பிரதேச ஒருங்கிணைப்புக்குழு உப தலைவர் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் கமல் பெளிகொள்ள தலைமையில் சௌபாக்யா கிராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பசு மாடுகள் வழங்குதல்



பாதும்பற பிரதேச செயலகப் பிரிவில் கஷ்டப் பிரதேசமான புடுகாட்டுவ கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட நடமாடும் சேவை



இரத்தினக் கல் மற்றும் தங்க நகைக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே அவர்கள் பாதும்பற பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த பயனாளிகளுக்கு பொருளுதவி வழங்கல்



உடுநுவர பிரதேச செயலகப் பிரிவில் பேல் இயந்திரம் மூலம் கழிவுகளை வேறு பிரித்தல்



உடுநுவர பிரதேச செயலகப் பிரிவில் சுதந்திர தின மாற நடுகை நிகழ்ச்சித்திட்டம்



2021.11.14 ஆம் திகதி உடுநுவர பிரதேச செயலகத்தில், இளைஞர் சேவை அதிகாரியால் நடாத்தப்பட்ட இரத்த தான நிகழ்வு



பா. உ. பேராசிரியர் ரஞ்சித் பண்டார அவர்களால் உடுநுவர பிரதேச செயலகப் பிரிவில் கெலிஓயா கரமட தெற்கு சௌபாக்யா வீட்டைத் திறந்து வைத்தல்



பா. உ. பேராசிரியர் ரஞ்சித் பண்டார தலைமையில் உடுநுவர பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்ட இரத்த தான நிகழ்வு



பா. உ. பேராசிரியர் ரஞ்சித் பண்டார அவர்களால் உடுநுவர பிரதேச செயலகப் பிரிவில் கெலிஓயா கரமட தெற்கு சௌபாக்யா வீட்டுக்கு அடிக்கல் நடல்.





பன்வில பிரதேச செயலகப் பிரிவில் சமூர்த்தி பெறுவோரை பலப்படுத்தும் நோக்கில் சமூர்த்திப் பிரிவுதன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சமூர்த்தி மாதம் நிகழ்ச்சித்திட்டம்



அபிவிருத்தி குன்றிய மற்றும் மோசமான காலநிலையால் பாதிக்கப்பட்ட விகாரைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்



யடினுவர பிரதேச செயலகப் பிரிவில் குறை வருமானம் பெறும் தொடம்வல சந்திராவதி குடும்பத்துக்கு வீடொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கல்



வாரி சௌபாக்யா தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் யடினுவர பிரதேச செயலகப் பிரிவில் பானபொக்க குளக்கட்டை சுத்தம் செய்தல் ஒதுக்கீடு ரூ. 1,307,272.00



யடினுவர பிரதேச செயலகப் பிரிவில் கொடபோகொட ராஜமகா விகாரையின் நூதனசாலைப் புனரமைப்பு. ஒதுக்கீடு ரூ. 2,000,000.00



தும்பனே பிரிவில் சௌபாக்யா உற்பத்திக் கிராம வாழ்வாதார அபிவிருத்தி கருத்திட்டம், நிகதென்ன கிராம அலுவலர் பிரிவில் விலங்கு வேளாண்மை கருத்திட்டம். ஒதுக்கீடு ரூ. : 1000,000.00
நிதி முன்னேற்றம் : ரூ. 100,000.00



தும்பனே பிரிவில் விசேட தேவையுடைய கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம். மெதகொட இஹல கிராம அலுவலர் பிரிவின் காளான் வளர்ப்பு கருத்திட்டம். ஒதுக்கீடு ரூ.100,000.00 நிதி முன்னேற்றம் ரூ. 100,000.00



தும்பனே பிரிவில் சௌபாக்யா உற்பத்திக் கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கீழ்க்கட்டுமான வசதிகளை மேம்படுத்தல் திட்டம். திரு. பியதாச அவர்களது வீட்டருகாமையிலிருந்து திரு. அத்தநாயக அவர்களது வீட்டருகாமை வரை அபிவிருத்தி செய்தல். ஒதுக்கீடு ரூ 500,000.00 . நிதி முன்னேற்றம் ரூ.48 ,780.88



ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவில் பல்லேபொகலவேல பொல்கஸ்வெள்ள பாதையை பக்கக் கட்டமைத்து அபிவிருத்தி செய்தல்



ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகப் பிரிவில் ஒவதென்ன இல. 9 குடியேற்ற வீதியை அபிவிருத்தி செய்தல்.
ஒதுக்கீடு: ரூ. 5,000,000.00
முன்னேற்றம்: ரூ. 4,799,998.74





அபிவிருத்தி குன்றிய சமயப் பாடசாலைகளுக்கு தளபாடம் வழங்குதல்



பாத்தஹேவாஹெட பிரதேச செயலகப் பிரிவில் வீட்டுத்தோட்டப் பயிராக மூலிகை நடல்



பாத்தஹேவாஹெட பிரதேச செயலாளர் பிரிவில் சௌபாக்யா உற்பத்திக்கிராம நிகழ்ச்சி. ஒதுக்கீடு: ரூ. 41,327,802.50
நிதி முன்னேற்றம்: ரூ. 30,363,374.98



பூஜாப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் பல்லேகம பஹலதெனிய பாதை அபிவிருத்தி. ஒதுக்கீடு ரூ. 15 இலட்சம்





திட்டத்தின் பெயர்– வதிகும்புற கம்மல் கம்மான வீதி அபிவிருத்தி. ஒதுக்கீடு:ரூ. 1,500,000.00
நிதி முன்னேற்றம் ரூ.1,462,500.00





திட்டத்தின் பெயர்–கோமறய குடியேற்ற மேல் பகுதி மையவாடி அபிவிருத்தி. ஒதுக்கீடு:ரூ.1000,000.00
நிதி முன்னேற்றம் ரூ.999,000.00



திட்டத்தின் பெயர்–அகுரனை பிரதேச செயலக பிரிவில் மாரஹெல சவ்பாக்ய காளான் உற்பத்தி கிராம அபிவிருத்தி. ஒதுக்கீடு:ரூ . 9.9. மி
நிதி முன்னேற்றம் ரூ.6.2 மி



திட்டத்தின் பெயர்–அகுரனை பிரதேச செயலக பிரிவில் திரவ பால் உற்பத்தி கிராம அபிவிருத்தி, திப்பிடிய. ஒதுக்கீடு:ரூ . 9.9. மி
நிதி முன்னேற்றம் ரூ.2. 8 மி



திட்டத்தின் பெயர்– ஹதரளியத்த பிரதேச செயலக பிரிவில் கெனவில்பத பிட வெலிலியத்த கடை வாரையான பாதை அபிவிருத்தி



மீள்குடியேற்றம் செய்யப்படுகின்ற சொகமாவத்த அரச காணிக்கான நுழைவுப்பாதை மற்றும் தடுப்பு மதில் நிர்மாணம். ஒதுக்கீடு: ரூ. 4,170,000.00

நிதி முன்னேற்றம்: ரூ. 4,048,543.69







வத்தேஹேன ஹரித்த பிம்மல் காளான் கிராம கருத்திட்டம். ஒதுக்கீடு: ரூ. 9,974,375.00

நிதி முன்னேற்றம்: ரூ. 9,877,064.02









இஹலகம நெசவுக் கைத்தொழில் நிலையத்தை அபிவிருத்தி செய்து அத்துறையில் ஈடுபாடுள்ள முயற்சியான்மைக் குடும்பங்கள் 25 ஐச் சேர்ந்த பிரஜைகளது வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்.

ஒதுக்கீடு: ரூ. 5,000,000.00 நிதி முன்னேற்றம்: ரூ. 4998009.58

ஹதரளியத்த பிரதேச செயலாளர் பிரிவில் மீகஸ் தென்ன விளையாட்டு மைதான அபிவிருத்தி



மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவில் நிர்மாணப் பணிகள் – மஹரவெல.



மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவில் உடிஸ்பத்துவ மகாவெளி விளையாட்டு மைதான அபிவிருத்தி.

ஒதுக்கீடு: ரூ. 1,500,000.00

நிதி முன்னேற்றம்.

ரூ. 1,470,000.00



மெததும்பர பிரதேச செயலாளர் பிரிவில் சௌபாக்யா உரற்பத்திக்கிராமம் (நிதுலேமட) ஒதுக்கீடு: ரூ. 10,490,000.00

நிதி முன்னேற்றம்.

ரூ. 2,509,385.00



பாத்தஹேவாஹெட பிரதேச செயலாளர் பிரிவில் வாரி சௌபாக்யா வேலை திட்டத்தின்கீழ் கிராமியஆறுகள், குளங்கள், ஓடைகள் புனரமைப்பு தேசிய வேலை திட்டம்.
ஒதுக்கீடு:ரூ.6,565,873.57
நிதிமுன்னேற்றம்ரூ.3,107,795.01



கிராமிய வயல்களை அண்டிய குளம், நீர்தேக்கங்கள் மற்றும் நீர் பாசன அபிவிருத்தி திரு. ராஜாங்க அமைச்சர் அனுராத லங்கா ஜயரத்ன அவர்களின் முன்னிலையில் வறுமை ஒழிப்பு தினத்தையொட்டி தொலுவ பிரதேச செயலாளர் பிரிவின்சௌபாக்யா சமூர்த்தி விஷேட வீடமைப்பு வேலை திட்டத்தின் கீழ் நாரங்கவிட பிரிவில் அமைக்கப்பட்ட மாதிரிவீடு கையளிப்பு.



தொலுவ பிரதேச செயலாளர் பிரிவில் பன்வில தென்ன சமூர்த்தி வலையத்தில் பிடவல பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட குடும்பம் ஒன்றிற்காக அமைக்கப்பட்ட வீடு வழங்கி வைப்பு.





பஸ்பாகே கோரலேபிரதேச செயலக பிரிவின் மீபிடிய தொடக்கம் கோபியாவத்த குடியேற்றத்தினூடான வீதி அபிவிருத்தி.
ஒதுக்கீடு:ரூ5,000,000.00 .
நிதிமுன்னேற்றம்ரூ4,849,000.00.





பஸ்பாகே கோரலேபிரதேச செயலக பிரிவினுள் விளையாட்டு மைதான அபிவிருத்தி. ஒதுக்கீடு:ரூ3,500,000.00.
நிதிமுன்னேற்றம்ரூ3,400,000.00.



தெல்தொட பிரதேச செயலக பிரிவின் சௌபாக்யா உற்பத்திக் கிராமிய வேலைக்கிட்டம்





தெல்தொட பிரதேச செயலக பிரிவில்விஷேட தேவையுடைய கிராமிய வேலைத்திட்டம்
ஒதுக்கீடு:ரூ5,000,000.00
நிதிமுன்னேற்றம்ரூ5,000,000.00.





கண்டி கதரகம தேவாலய வளாகத்தில் அமைந்திருக்கும் தேவாலயத்தின் கூரை மற்றும் வேறு புனரமைப்பு வேலைகள்.
ஒதுக்கீடு:ரூ.2,250,000.
நிதிமுன்னேற்றம்ரூ2,182,500.00.





ஹந்தான தபோதரமய விகாரையின் (சிரிசீள விமல அறநெறி பாடசாலை) கட்டிக்கொண்டு இருக்கும் அரநெறிப்பாடசாலையின் கட்டிட வேலை நிவர்த்தி.ஒதுக்கீடு:ரூ3,000,000.00.
நிதிமுன்னேற்றம்ரூ2,940,000.00.





மினிப்பே பிரதேச செயலாளர் பிரிவில்தேவையுடைய கிராமங்களை அடையாளம் காணல்–மெதகெலே கிராமத்திற்கு செல்லும் வீதி அபிவிருத்தி.
ஒதுக்கீடு:ரூ. 50,00000.00
நிதிமுன்னேற்றம்ரூ 48,50000.00



பாத்தும்பர பிரதேச செயலாளர் பிரிவில்சௌபாக்யா உற்பத்தி வேலைத்திட்டம்- திரவப்பால் உற்பத்தி
ஒதுக்கீடு:ரூ.- 2,827,268.49
நிதிமுன்னேற்றம்ரூ - 2,827,268.49



2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக யடிநுவர பிரதேச செயலாளர் பிரிவின் கொழும்பு கண்டி வீதியின் கீழ்கடுகன்னாவ பிரதேசத்தின்மண்சரிவு.



COVID-19தொற்றுநோய் நிலைமையை கட்டுப்படுத்த ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவின் கொவிட் தடுப்பூசி ஏற்றல்- கொணிகோட ஆனந்த வித்தியாலயம்



ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவின்யடிவவெல பிரிவின்அதிக மழையால் மண்மேடு வீடொன்றின் மீது









